உபாகமம் 4:29

ஆயினும் உன் தேவனாகிய கர்த் தரை நீ அங்கே தேடுவாய். அவரை உன் முழு இருதயத்தோடும் சஞ்சலம் நிறைந்த ஆத்துமத்தோடும் தேடி விரும்புவாயானால் அவர் உனக்கு அகப்படுவார்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 16:26

மெய்யாகவே மனிதன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக்கொண்டா லும், தன் ஆத்துமம் சேதப்பட்டால் அவனுக்குப் பிரயோசனமென்ன? அல்லது தன் ஆத்துமத்துக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?

சங்கீதங்கள் 62:1

தேவனே! என்னுடைய தேவனே! விடியற்காலம் விழித்து நான் உம் மைத் தேடுகிறேன்; என் ஆத்துமம் உமதுபேரில் தாகங்கொண்டது; என் சரீரமும்கூட உமது பேரில் எவ்வளவு வாஞ்சை கொண்டது.

எரேமியாஸ் ஆகமம் 6:16

இன்னுங் கர்த்தர் பின்வரு மாறு சொல்லுகிறதாவது: வழியில் நின்று பார்த்துக்கொண்டு: உங்கள் பழைய நடபடிகளென்ன, எது நல்ல வழி என்று விசாரித்து அதில் நட வுங்கள்; அப்போது உங்கள் மனங் குளிருமாம்; அதற்கு அவர்களோ அவ்வழியே செல்லமாட்டோம் என்றார்கள் (மத்.11:20).

சங்கீதங்கள் 42:11

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 22:37

சேசுநாதர் அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தாவை உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்து மத்தோடும், உன் முழு மனதோடும் சிநேகிப்பாயாக. (உபாக. 6:5.)

சங்கீதங்கள் 139:13-14

இப்படியே நீதிமான்கள் உம்முடைய நாமத்தைத் துதிப்பார் கள்; செம்மையானவர்கள் உமது சமுகத்திலே வாசம்பண்ணுவார்கள்.

சங்கீதங்கள் 63:1

சர்வேசுரா! நான் உம்மை வேண்டிக் கொள்ளும்போது என் மன்றாட்டைக் கேட்டருளும்; என் சத்துருவினுடைய பயத்திலிருந்து என்னை விடுவித்தருளும்.

எரேமியாஸ் ஆகமம் 29:13

நீங்கள் நம்மைத் தேடுவீர்கள்; முழு இருதயத்தோடு தேடிய பின்னர், நம்மை அடைவீர்கள்.

அருளப்பர் 3-ம் நிருபம் 1:2

எனக்கு மிகவும் பிரியமுள்ளவனே, உன் ஆத்துமம் நன்றாய் வாழ்ந்திருப்பதுபோல், நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படிக்குப் பிரார்த்திக்கிறேன்.

சங்கீதங்கள் 103:1

என் ஆத்துமாவே! ஆண்ட வரை வாழ்த்துவாயாக; என் தேவனா கிய ஆண்டவரே! சொல்லுக்கு எட்டாவண்ணம் உம்முடைய மகத் துவத்தை விளக்கினீர்.

பழமொழியாகமம் 16:24

நல்ல வார்த்தைகள் தேனைப் போல (இன்பமாயிருக்கும்) திரேகத் தின் சுகமும் ஆன்மாவின் மதுரமா யிருக்கும்.

ஷேஜாசுவாவின் திருவாகமம் 22:5

ஆனாலும் தேவனாகிய கர்த்த ருடைய தாசனான மோயீசன் உங்க ளுக்குக் கொடுத்த கட்டளைகளை யும், சட்டப்பிரமாணங்களையும் கெட்டியாய்க் கைக்கொண்டு நுணுக் கமாய் நிறைவேற்றுவதில் சாக்கிரதை யாயிருங்கள்; அதுகள் என்னவென் றால்: நீங்கள் கர்த்தரில் அன்புகூர்ந்து அவருடைய எல்லா வழிகளிலும் நடந்து, அவர் கற்பனைகளை அனு சரித்து, அவரைப் பற்றிக்கொண்டு உங்கள் முழு இருதயத்தோடும் முழு மனதோடும் அவரைச் சேவிக்க வேண்டும் என்பதேயாமென்றான்.

சங்கீதங்கள் 130:5

சங்கீதங்கள் 120:2

பரமண்டலத்தையும் பூமண் டலத்தையும் படைத்த கர்த்தரிடத் திலிருந்து எனக்கு உதவியுண்டாகும்.

சங்கீதங்கள் 71:23

ஷேஜாசுவாவின் திருவாகமம் 23:14

இதோ மனிதர் எல்லோரும் போகிற வழியே நான் இன்று போகி றேன். கர்த்தர் உங்களுக்குத் தருவோ மென்று எவ்வித வார்த்தைப் பாடு களையுங் கொடுத்திருந்தாரோ அந்தச் சகல வார்த்தைகளிலும் ஒரு வார்த்தைகூடத் தவறிப் போகவில் லையென்பதை நீங்கள் முழுமன தோடு அறிந்திருப்பீர்கள் (3அர.2:2).

சங்கீதங்கள் 19:7

தமது பரீசுத்த மோட்சத்தி னின்று அவருடைய மன்றாட்டைக் கேட்டருளுவார்; இரட்சணியம் அவ ருடைய வல்லமை பொருந்திய கரத் தில் இருக்கின்றது.